விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 194 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 16 சனிக்கிழமை (01.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## மனித புதைகுழி விடயங்களை அரசு மூடி மறைக்கும் ஆபத்து

### சர்வதேச தலையீடு தேவை என்கிறார் கஜேந்திரன் எம்.பி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் மத்தி பகுதியில் பெண்களது எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள தாகக் கூறப்பட்டுள்ளதையடுத்து, குறித்த இடத்தினை தமிழ்த் தேசிய 15

## குறைவடைந்தது மின்சாரக் கட்டணம்

(கொழும்பு)

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின்சார கட்டணத்தை குறைக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

14.2 வீதத்தால் இவ்வாறு மின் கட்டணம் குறைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, வீட்டுப்பாவனையின் 0 முதல் 30 அலகுகளுக்கான மாதாந்த நுகர்வுக் கட்டணம் 65 சதவீதம் குறைக்கப்படும் எனக் கூறப்படுகிறது. 15

### லங்கா சதொசவில்

## 3 வகையான அரிசியின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் 3 வகையான அரிசியின் விலையை நேற்று முதல் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ வெள்ளை அரிசியின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 165 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ வெள்ளை நாட்டு 15

### முல்லைத்தீவு மனித புதைகுழி

# 6ஆம் திகதியன்று அகழ்வுப் பணி

### மனித எச்சங்களை பார்வையிட்ட பின் நீதிபதி உத்தரவு





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் காணப்படுகின்ற பகுதியில் எதிர்வரும் 6ஆம் திகதி அகழ்வுப் பணிகளை முன்னெடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (2ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் விபத்து; குடும்பஸ்தர் பலி

(முல்லைத்தீவு)

மரணச் சடங்கு ஒன்றுக்கு சென்று கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பள்ளம் ஒன்றில் விழுந்ததன் காரணமாக உள்காயம் ஏற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் உயிரி ழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அலும்பில் 15

## உழைக்கும் மக்கள் மீது அரசு சுமைகளைச் சுமத்தியுள்ளது

### எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் உழைக்கும் மக்கள் மீது அனைத்துச் சுமைகளையும் சுமத்தியுள்ள தாகவும் இந்தநேரத்தில் சரியான விடயங்களை 15

## பாராளுமன்றில் இன்று கடன் மறுசீரமைப்பு விவாதம்

(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை விவாதத்தை நடத்த பாராளுமன்ற நடவடிக்கை தொடர்பான தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற சபை நடவடிக்கைகளை முன்னெடுக்காதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமைக்கான சபை நடவடிக்கைகளை எதிர்வரும் 1.

## நாட்டின் பணவீக்கம் சடுதியாக குறைவு

(கொழும்பு)

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, ஜூன் மாதத்தில் பணவீக்கம் 12 சதவீதமாக குறைந்துள்ளது.

அத்துடன் உணவு வகை பணவீக்கம் கணிசமாக குறைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட் 15

## நலன்புரித் திட்டத்தில் அரசியல் தலையீடு இல்லை

### அமைச்சர் பிரசன்ன



(கம்பஹா)

அஸ்வசும நலன்புரி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் அதிகாரத்தின் தலையீடுகள் இருக் 15

## ஓகஸ்ட் முதல் ஓட்டோக்களுக்கு மீற்றர் கட்டாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாடகை சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாத முதல் கட்டண மீற்றர் பொருத்துதல் கட்டாய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Hybrid International Hub (pvt) ltd Jaffna**

கனடா, லண்டன், யப்பான், மலேசியா
அவுஸ்ரேலியா, இந்தியா ஆகிய
நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள்
பூர்த்தி செய்து தரப்படுவதுடன்
விசாக்களும் பெற்றுத் தரப்படும். (C-6848)

**Hybrid International Hub (pvt) ltd Jaffna**
**077 815 5920, 021 222 1265**

# எரிபொருள் விலையில் மாற்றம் 10 ரூபாவால் பெற்றோல் விலை அதிகரிப்பு

எரிபொருள் விலை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஒக்டேன்92. லீற்றர் பெற்றோல் ஒன்றின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன். இதன்படி புதிய விலை 328 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், ஒக்டேன் 95 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 365 ரூபாவாகும்.

லங்கா ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டதன் காரணமாக, புதிய விலை 308 ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, புதிய விலை 346 ரூபாவாகவும் உள்ளது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி இதன் புதிய விலை 236 ரூபாவாகும். (4.7)

# 6 ஆம் திகதி...

நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை தோண்டிய போது நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டது.

இந்த சம்பவத்தினை தொடர்ந்து கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கொக்குளாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக நேற்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் நேற்று மாலை 2.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா அவர்கள் குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது குறித்த மனித எச்சங்கள் காணப்படுகின்றன பகுதியில் இம் மாதம் 6ஆம் திகதி அகழ்வு பணிக்கு நீதிபதி உத்தரவிட்டதோடு அதற்குரிய நபர்களுக்கான உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும் அதுவரை எச்சங்கள் அழிவடையாமல் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிஸாருக்கு பணிப்பு விடுத்தார்.

இது பெண் போராளிகளின் தடையங்களாக காணப்படுகின்றது பெண்களின் பச்சை சீருடை மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன இதன்போது இனம் காணப்பட்டுள்ளன இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மக்கள் மத்தியில் பாரிய ஐயம் எழுந்துள்ள நிலையில் குறித்த பகுதிக்கு நீதிபதி வருகைதந்தபோது குறித்த பகுதியில் மனித உரிமைகள் சட்டத்தரணி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இழஞ்செழியன், கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்கள், கிராம மக்கள் உள்ளிட்ட பலர் பிரசன்னமாகியிருந்தனர். (4.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.06.2023 அன்று இடம்பெற்ற மக்கள் நலன்பேணும் அமைப்பின் கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட

**மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன**
**(முன்னாள் ஜனாதிபதி)**

அவர்களால் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர்களின் சமூக சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்**
**சிறி மீனாட்சி நகை அகம்**
**183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (16147)

**ஊர் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

**தினமும் பெற்றுக்கொள்ளலாம்**

| | |
|---|---|
| 1 நாள் குஞ்சு | - 200/= |
| 1 மாதம் | - 600/= |
| 1.5 மாதம் | - 750/= |
| 2 மாதம் | - 900/= |

(16154)

**077 332 2433**

## பெயர் மாற்ற அறிவித்தல்

இல.33, உதயநகர் கிழக்கு கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட நாகராஜா தவபாலசிங்கம் ஆகிய எனது பெயரை இன்றிலிருந்து நாகராஜா தனபாலசிங்கம் எனப் பெயர் மாற்றம் செய்கிறேன் இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் இலங்கை வாழ் சனநாயக குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*உண்மையுள்ள*
நாகராஜா தனபாலசிங்கம்
(C-6850)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



18 . 03 . 1946 — 03 . 07 . 2020

எமது அன்புத்தெய்வம்

**அமரர் கந்தையா கனகசபை**

( ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்- இலங்கை வங்கி )

திதி 01.07.2023 ( சனிக்கிழமை )

மீளாத்துயில் கொண்டு மூன்றாண்டு கடந்தாலும்
ஆறவில்லை எம் மனது
தீராத்துயரில் தவிக்கின்றோம் நாம் இங்கு
பாராட்டி சீராட்டி பாசமாய் வளர்த்தீரே பாதி வழியில்- எம்மை
பரிதவிக்க விட்டு விட்டுச் சென்றதென்ன, குடும்பத்தின் ஆணிவேராய்
வழிகாட்டி வாழ்ந்தவரே- நீங்கள்
நீறாகிப்போனாலும் உங்கள் வழித்தடத்திலேயே- நாம்
என்றென்றும் தொடர்திடுவோம் இன்னும் ஆண்டாண்டு காலம்
கடந்தோடிப்போனாலும்- உங்கள் புன்னகை பூத்த முகம்- எங்கள்
நெஞ்சோடு வாழ்ந்திருக்கும்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி*

**உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்** (16153)

**37th General Convocation 2023**
UNIVERSITY OF JAFFNA
GRADUATION PHOTOSHOOT



4x6 20 PRINT
14x20 2 enlarge FRAME
BOOK NOW
AVAILABLE HERE
**செந்தமிழன்**
DIGITAL STUDIO
077 6405572
(16134)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழில் இருந்து கொழும்பு சென்ற
# பயணிகள் பேருந்து தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து 43 பயணிகளுடன் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சொகுசு பயணிகள் பேருந்து ஒன்று மதுரங்குளி பிரதேசத்தில் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதன் போது, குறித்த பேருந்து முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)





# வட்டி வீதங்கள் குறைக்கப்படும் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எதிர்பார்த்த நிலைமையை முன்னெடுத்து சென்றால் இன்னும் சில மாதங்களில் வட்டி வீதம் குறையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கை வர்த்தக சம்மேளன அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடனை மறுசீரமைப்பது உங்களுக்கும் பணியாளர்களுக்கும் எவ்வளவு முக்கியம் என்பதை அவர்களுக்கு விளக்குவது சிறந்த விடயம் என்று நான் நினைக்கிறேன். அது உங்களால் செய்யக்கூடிய ஒன்று என்று நான் நினைக்கிறேன்.

இந்த நிலைமையை இன்னும் சில நாட்களுக்கு பராமரிக்க முடிந்தால், அது மிகவும் உதவியாக இருக்கும். சிறந்த நிலைமைகள் ஏற்படும்.

அதே நேரத்தில், எங்கள் வட்டி விகிதங்களும் குறையும்.

அது சில மாதங்களில் நடக்கும். இரண்டாவதாக, வளர்ச்சி உதவி தொடங்கும்.

இது கட்டுமானத் துறையின் வளர்ச்சிக்கும் உதவும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# பொதுநூலகத்தை பார்வையிட்டார் மைத்திரி



(சாவகச்சேரி)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மூன்று நாட்கள் விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது நூலகத்தை பார்வையிட்டதுடன்-நூலக உத்தியோகத்தர்களுடனும் அவர் சிநேகித பூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். (நி-5-6-30-33)

# ஆயிரம் ரூபாவை எட்டிய பச்சை மிளகாய் விலை

(கொழும்பு)

காய்கறி சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் சில்லறை விலை ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு கிலோகிராம் பச்சை மிளகாயின் மொத்த விலையும் 800 முதல் 900 ரூபா வரை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தைக்கு வரும் பச்சை மிளகாயின் அளவு பெருமளவில் குறைந்துள்ளமையால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரங்களில் 350 முதல் 500 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பச்சை மிளகாய், தற்போது ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் நாட்களில் பச்சை மிளகாயின் விலை மேலும் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்.திரு. தேசோமயானந்தம் புத்திரசிகாமணி (புத்திரி அப்பா)

பிறப்புஇ
05 - 11 - 1946

இறப்பு
02 - 06 - 2023

சீரகல்வி எமையெல்லாம் சிறப்போடு கற்க வைத்து
சூடமேற்றி இறைவனையே தினமும் தொழுது
கார்கால குளிராய் காலமெல்லாம் உளம் குளிர்ந்து
கரும்பாக எமது தேவைகளை நிறைவாக்கி
பார்தன்னில் எவ்வகைக் குறை ஏதும் வைக்காது
பாசமுடன் மடியிருத்தி பண்புரைத்த தெய்வமே
வேர் பதித்த விருட்சமதின் கிளையாய் நிழல் தந்தீர்
வாழும் வரை நெஞ்சினிலே சுமந்தே வாழ்வோம்.

நாளையதினம் 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு அன்னாருடைய ஆத்மசாந்திப் பிரார்த்தனை வியாபாரி மூலை எரிஞ்சம்மன் கோவிலடி அந்தியேட்டி மண்டபத்தில் கிரியை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

எரிஞ்சம்மன் கோவிலடி,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(சி - 6846)

தகவல்: என்றும் நினைவோடு
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி முதல் இன்னிங்சில் 416 ரன்கள் குவிப்பு

## ஸ்மித் அதிரடி



ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 2 ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெறுகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து கப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் பந்து வீசுவதாக அறிவித்ததையடுத்து அவுஸ்தி ரேலியா பட்டிங் செய்தது.

அவுஸ்திரேலிய அணியின் துவக்க வீரர் டேவிட் வார்னர் 66 ரன்கள் குவித்து ஆட்டமிழுந்தார். லபுஷேன் 47 ரன்கள் சேர்த்தார். ஸ்டீவ் ஸ்மித்-டிராவிஸ் ஹெட் ஜோடி அபாரமாக ஆடி ஸ்கோரை உயர்த்தியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்டீவ் ஸ்மித் சதம் அடித்தார். அவர் 110 ரன்களில் வெளியேறினார். அதன்பின், டிராவிஸ் ஹெட் 77 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனால் 2ம் நாளான நேற்று அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 416 ரன்களில் ஓல் அவுட் ஆனது. (6)

# ஓபன் டென்னிஸ்

# சிட்சிபாஸ் அதிர்ச்சி தோல்வி ஜேர்மன் வீரர் காலிறுதிக்கு தகுதி

ஸ்பெயினில் மல்லோர்கா ஓபன் டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 5 ஆம் நிலை வீரரான கிரீசை சேர்ந்த சிட்சி பாஸ் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.



காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர் ஜேர்மனியின் யானிக் ஹான்ப்மேனை எதிர் கொண்டார். முதல் சுற்றை 4-6 என சிட்சிபாஸ் இழந்த போதிலும், 2 ஆவது செட்டை 6-3 எனக் கைப்பற்றினார்.

வெற்றியை தீர்மானிக்கும் 3 ஆவது சுற்றில் ஜேர்மனி வீரர் ஹான்ப்மேன் அபாரமாக விளையாடினார்.

அவருக்கு சிட்சிபாஸால் ஈடுகொடுக்க முடியவில்லை. அதனால் 2-6 என எளிதில் 3 ஆவது செட்டில் தோல்வியடைந்து போட்டியில் இருந்து வெளியேறினார்.

யானிக் ஹான்ப்மேன் 6-4, 3-6, 6-2 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# வாலிப கிண்ணத் தொடர்

# இறுதிப்போட்டியில் அளவெட்டி மத்தி அணியுடன் மோதவுள்ள அல்வாய் இளைஞர் அணி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தனது 10 ஆவது ஆண்டை முன்னிட்டு நடாத்தி வருகின்ற மாபெரும் 48 அணிகள் பங்கேற்கின்ற துடுப்பாட்ட போட்டியில் இரண்டாவது அரையிறுதி போட்டியில் மல்லாகம் ஸ்டார் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைநதது அல்வாய் இளைஞர் அணி.

மல்லாகம் ஸ்டார் அணியும் அல்வாய் இளைஞர் அணி மோதிய அரையிறுதி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் இளைஞர் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 06 பந்து பரிமாற்றத்தில் 05 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களை பெற்றது . துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் கமல் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் நிகாசன் 19, சாது 14, கபில் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுஜீபன் 2 இலக்குகளையும், சஞ்சி,பிரசன்னா 1 இலக்கை வீழ்த்தினர்.

பதிலுக்கு 73 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஸ்டார் அணி கீதன், டிலக்சன் சிறந்த பந்துவீச்சுக்கு ஈடு செய்ய முடியாமல் நிர்ணயிக் கப்பட்ட 06 பந்துபரிமாற்றத்தில் 07 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களை பெற்று 30 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது. இதன் மூலம் இறுதிப் போட்டிக்கு நுழைந்தது அல்வாய் இளைஞர் அணி.

துடுப்பாட்டத்தில் ரிஷாந் 18 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் கீதன் 03 இலக்குகளையும் டிலக்சன் 02 இலக்குகளையும் மற்றும் பிரசாந், சாது ஒவ்வொரு இலக்கினை வீழ்த்தினர். நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மத்தி விளையாட்டு மைதானத்தில் அளவெட்டி மத்தி அணியுடன் அல்வாய் இளையஞர் அணி மோதவுள்ளது. (6)

# தகுதிகான் சுற்றுப் போட்டி ஜிம்பாப்வே வெற்றி



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச்சுற்று ஜிம்பாப்வேயில் நடந்து வருகிறது.

சுப்பர் சிக்ஸ் சுற்றில் ஒவ்வொரு அணியும் தங்களுடைய எதிர் பிரிவில் இருந்து முன்னேறிய அணிகளுடன் தலா ஒரு முறை மோதும்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடந்த சுப்பர் சிக்ஸ் சுற்று முதல் போட்டியில் ஜிம்பாப்வே, ஓமன் அணிகள் மோதின. டாஸ் வென்ற ஓமன் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட்டு இழப்புக்கு 332 ரன்கள் குவித்தது. சீன் வில்லியம்ஸ் 142 ரன்கள் எடுத்தார். கடைசி கட்டத்தில் அதிரடியாக ஆடிய லாங்வே 43 ரன்கள் எடுத்து அவுட்டானார்.

தொடர்ந்து ஆடிய ஓமன் அணி போராடி தோல்வி அடைந்தது. தொடக்க ஆட்டக்காரர் பிரஜாபதி சதமடித்து 103 ரன்னில் அவுட்டானார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில், ஓமன் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 318 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் ஜிம்பாப்வே அணி 14 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதுடன், இந்தியாவில் ஒக்டோபர் 5 முதல் நவம்பர் 19 வரை நடைபெறும் 13 ஆவது 50 ஓவர் உலக கிண்ண போட்டிக்கு தகுதி பெறும். (6)

# சதத்தை தவறவிட்ட இங்கிலாந்து வீரர்



இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெறுகிறது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தின் இறுதியில் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 416 ரன்களை சேர்த்தது.

இங்கிலாந்து சார்பில் ஒல்லி ராபின்சன், ஜோஷ்டங் தலா 3 விக்கெட்டும், ஜோ ரூட் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. ஜாக் கிராலே, பென் டக்கெட் ஜோடி நிதானமாக ஆடியது. கிராலே 48 ரன்னில் அவுட்டானார். அடுத்து இறங்கிய ஒல்லி போப் 42 ரன்னில் வெளியேறினார்.

சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பென் டக்கெட் 98 ரன்னில் ஆட்டமிழந்தார். ஜோ ரூட் 10 ரன்னில் அவுட்டானார். இரண்டாம் நாள் முடிவில் இங்கிலாந்து 4 விக்கெட் இழப்புக்கு 274 ரன்கள் எடுத்துள்ளது. ஹாரி புரூக் 45 ரன்னும், பென் ஸ்டோக்ஸ் 17 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிங்கராஜ வனத்திலிருந்து உயிரினங்களை கடத்த முயற்சி

## வெளிநாட்டு பிரஜைகள் கைது

(கொழும்பு)

சிங்கராஜ வனத்திலிருந்து சட்ட விரோதமாக உயிரினங்களை எடுத்துச் செல்ல முயற்சித்த ஈரானிய பிரஜைகள் மூவரும் இலங்கை பிரஜையொருவரும் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சில அரிய வகை உயிரினங்களும் மூலிகை வகைகளும் மீட்கப்பட்டுள்ளதாக வனப்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிங்கராஜ வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து இவர் கள் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

# நாட்டின் வங்குரோத்து நிலை செப்டெம்பருக்குள் நிவர்த்திக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள வங்குரோத்து நிலை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் முறியடிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய முன்முயற்சிகள், குறிப்பாக உள்நாட்டு கடன் மேம்படுத்தல் திட்டத்தை ஆதரிக்கும் கூட்டு முயற்சிகளுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (நி-5)

# தங்கம் விலை குறைந்தது

(கொழும்பு)

இலங்கையில் தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தகவலின்படி 24 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை 160,000 ஆகவும் 22 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை 147,000 ஆகவும் பதிவாகியுள்ளது. (நி-5)


நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



மண்ணில் 05 . 02 . 1964

விண்ணில் 14 . 07 . 2019

அமரர்.

செல்வராசா தயானந்தன்

(திதி: ஆனி பூர்வபட்ச திரயோதசி-01.07.2023)

உன் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

பாசமுள்ள ஐயா மற்றும் உறவுகள்.



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

01.07.2023



மண்ணில் மகனாய் 1943.04.18

மனதில் மாணிக்கமாய் 2021.06.22

அமரர்

துரையர் சந்தனம்

ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( விசேட தரம் )

திதி : பூர்வபக்க திரயோதசி

ஆலமரமாய் நீர் இருந்து
எமை விழுதுகளாய் விருட்சமாக்கி
உத்தமராய் வாழ்ந்தெம்மை உயர்த்தி வைத்த
உங்களை எப்படி மறந்து விட முடியும்

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(18125) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# இராசிபலன்

01.07.2023
ஆனி 16, சனிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.25 மணிவரை
அனுசம் பிற்பகல் 1.30 மணிவரை

சுபநேரம் -2.56-4.26 மணிவரை
இராகுகாலம்-8.56-10.26 மணிவரை
சனிப் பிரதோஷ விரதம்

சந்திராஷ்டமம்- அச்சுவினி, பரணி

வளவன்



**மேஷம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.



**கடகம்** தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், மற்றவர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.



**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.



**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.



**ரிஷபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.



**சிம்மம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.



**விருச்சிகம்** குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.



**கும்பம்** என்றோ நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், அன்பு நண்பர்களின் ஆதரவுண்டு, வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.



**மிதுனம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியம் சீராகும், நன்மைகள் நடைபெறும் நாள்.



**கன்னி** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், செயற்பாட்டில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**தனுசு** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம்.



**மீனம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கலாம், தொழில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் யாழில் அதிகரிப்பு

## 5 மாதங்களில் 53 முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இவ்வருடம் சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் கடந்த மே மாத இறுதி வரை பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு கடந்த ஐந்து மாதங்களில் சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறிப்பாக சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுமிடத்து குறித்த முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்ற சட்டநியதியின் அடிப்படையில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் அனைத்திற்கும் உரிய சட்ட கோவைக்கு அமைய நீதி மன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் முதல் அரையாண்டு பகுதிக்குள் சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33-104)

# சிவபூமி சிறுவர் மனவிருத்தி பாடசாலையின் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி சிறுவர்நல மன விருத்திப் பாடசாலையின் 20 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா தம்பதிகள், சிறப்பு விருந்தினராக அவுஸ்திரேலிய வைத்திய கலாநிதி வை.மனோமோகன் தம்பதிகளும் கௌரவ விருந்தினர்களாக நல்லூர்ப் பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# அருணகிரிநாதர் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

அருணகிரிநாதர் குருபூசை தினம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையில் இடம்பெறவுள்ளது. (6)

# சிறுவர் நாடகத் திருவிழா இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயல் திறன் அரங்க இயக்கமும் இலங்கை, இந்திய கலை இலக்கிய அமைப்பான முற்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறுவர் நாடகத் திருவிழா இன்றும் நாளையும் நல்லூரில் உள்ள அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இரு நாள் நிகழ்வில் சிங்கம், முயலார் முயல்கிறார் மற்றும் கூடி விளையாடு பாப்பா ஆகிய மூன்று நாடகங்கள் மேடையேற உள்ளன.

மாலை 7.10 முதல் நாடகத்தின் அரங்கேற்றம் இடம் பெறும். தொடர்ந்து 7.45 மணிக்கு இரண்டாவது நாடகம் மேடையேறும் என திறன் அரங்க இயக்க நிறுவுநர் தே.தேவானந்த் அறிவித்துள்ளார். (நி-5-6-33)

# குடிமனைப் பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் எதிர்ப்புத் தெரிவித்து ஏழாலையில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஏழாலை தெற்கு, புளியங்கிணற்றடி வீதியில் பொதுமக்கள் நெருக்கமாக வாழும் குடிமனைப் பகுதியில் பொதுமக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டு வருவதற்கு எதிர்பை வெளிப்படுத்தும் வகையில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களால் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ள இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டு வரும் காணியின் வாயிலில் மேற்கொள்ளப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் நெருக்கமாகக் குடிமனைகள் காணப்படுவதனால், பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் தொலைத்தொடர்புக் கோபுரத்தை இடமாற்றுமாறு அதனை அமைத்து வரும் நிறுவனத்திடம் கோரியதுடன், அப் பணிகளை நிறுத்துமாறு சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

இதனாலேயே கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (நி-5-6-33)

# பாதுகாப்பாக பயணம் செய்ய முடியாவிட்டால் உந்துருளிப் பாவனையை கைவிடுங்கள்

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி முகநூல் பதிவு

(யாழ்ப்பாணம்)

உந்துருளியில் பயணிக்கும் முன்னர் மிகவும் பாதுகாப்பான பயணம் செய்ய வேண்டும் என தீர்மானம் எடுக்க வேண்டும். அல்லது உந்துருளி பாவனையை கைவிட வேண்டும் என மருத்துவமனை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற நேர் எதிராக பயணித்த மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மருத்துவமனை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி முகநூலில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விபத்தின் பின்னர் யாழ். போதனா மருத்துவமனை விபத்து சிகிச்சை பிரிவில் படுகாயமடைந்தவர்களின் உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கடுமையான முயற்சித்த போதும் சிகிச்சை பலனின்றி அவர்கள் உயிரிழந்ததாக தெரிவித்தார்.

இருவரது குடும்பங்கள், உறவினர்கள், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், மற்றும் நண்பர்களின் அழுகையும் துயரமும் மருத்துவமனை விபத்து சிகிச்சை பிரிவுப் பகுதியை சில மணி நேரம் அவல உணர்வை ஏற்படுத்தியது



எனவும் வடபகுதியில் உந்துருளி பயணம் மிகவும் அபாயகரமான செயல்.

அதிகரித்த வேகம், கவனக்குறைவு என பல தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களில் அக்கறை கொள்வதில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

### இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கம் இந்து போர்ட் சு.இராசரத்தினத்தின் 139 ஆவது பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வாழ்வக‌த் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)




# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழில் தகைமை மட்டம் -5 இன் 1 ஆம் அரையாண்டு எழுத்துப்பரீட்சை-2022 டிசெம்பர்-(2023-ஜூலை)

மேலே குறிப்பிட்ட பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. எனவே பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பபடிவங்களை தொழில் நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று ஜூலை மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்.அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுக உரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் இடம்பெறும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய மறை குண்டலி தியானப் பயிற்சிகள். சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் D.வெற்றிசெல்வி வழங்குவார்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Invitation for Bids (IFB-2023/02)**
**Department of Irrigation, Northern Provincial Council.**

பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணம் அவர்களால் PSDG, Recurrent நிதி மூலங்களின் 11 எண்ணிக்கையிலான வேலைகளுக்கு தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இக்கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை 29.06.2023 வெளிவந்த Daily News பத்திரிகை பக்கம் 17 இல் பார்வையிடவும்.

**மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

(சி-6844)

## சேவைநலன் பாராட்டு

திருமதி. **லலிதா தர்மதேவன்**

Best Wishes

(பயிற்றப்பட்ட -சமயம், SLTS-I)



**சேவை விபரம்**

நு/நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்
16.04.1985-31.12.1987
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
01.01.1988-31.12.1989
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி
01.01.1990-28.02.1992
யா/விக்ரோறியாக் கல்லூரி
01.03.1992-13.01.2014
யா/வட்டு இந்துக் கல்லூரி
14.01.2014-30.06.2023

எமது கல்லூரியில் ஒன்பது வருடங்களாக ஆசிரியரர்கச் சிறப்பாகப் பணியாற்றி 01.07.2023 இல் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.லலிதா தர்மதேவன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் நோய் நொடி இன்றி நலமாக வாழ வேண்டும் என நடராஜப் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க பல்லாண்டு! வாழ்க வளமுடன்!

வாழ்த்துவோர்: நலன்புரிக் கழகம்,
யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.

(16100)

# குழந்தைகளுக்கான கதிரியக்க நிபுணரும் நாட்டை விட்டு வெளியேறினார்

(கொழும்பு)

குழந்தைகளிற்கான கதிரியக்க சிகிச்சை நிபுணராக இதுவரை பணியாற்றிய மருத்துவரும் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார் என விசேட வைத்தியர் சங்கத்தின் வைத்தியர் அசோக் குணரட்ண தெரிவித்துள்ளார்.

2024 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் 4000 விசேடவைத்திய நிபுணர்கள் தேவை என மதிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் தற்போது 2000 பேரே உள்ளனர்.

விசேட வைத்தியர்களிற்கான ஓய்வூதிய வயது குறித்த அரசாங்கத்தின் அறிவிப்பு காரணமாக எஞ்சியுள்ள 50 வீதமான வைத்தியர்களில் 250 பேரை இழக்க வேண்டிவரும்.

இதன் காரணமாக நாட்டில் 1750 விசேடவைத்தியர்களே காணப்படும் நிலைமை உருவாகும் என தெரிவித்துள்ள அவர் அவசரமருத்துவ பிரிவை சேர்ந்த 30 வைத்தியர்களிற்கு விசேட வைத்தியர்கள் பயிற்சியை வழங்கினோம். ஆனால் அவர்களில் 20 பேர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர்.

2024-25 இல் நாட்டிற்கு 289 மயக்க மருந்து நிபுணர்கள் அவசியம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த வருடம் 155 பேரே எஞ்சியிருப்பார்கள். 30 பேர் வெளிநாடுகளிற்கு சென்றுவிட்டனர். 60 வயதானவர்கள் ஓய்வு பெற்றால் 20 பேர் மாத்திரமே எஞ்சுவார்கள்.

மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் 100 விசேட வைத்தியர்களும் மயக்க மருந்து நிபுணர்களும் எஞ்சியிருப்பார்கள் என சொல்வது துரதிஷ்டவசமானது. இலங்கையில் ஒரேயொரு குழந்தைகள் தொடர்பான கதிரியக்க நிபுணர் இருந்தார். அவ ரும் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார் என வைத்தியர் குணரட்ண தெரிவித்துள்ளார். (நி-5)

# கடன் மறுசீரமைப்பிற்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு

(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில், அரசாங்கத்தினால் இன்று பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ள யோசனைக்கு, எதிராக வாக்களிக்க, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் உத்தர லங்கா சபாகய என்பன தீர்மானித்துள்ளன. இன்று விசேட பாராளுமன்ற அமர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான யோசனை மீது, இன்றும் நாளையும் விவாதம் இடம்பெற்று, வுாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரக்கெடுப்பின் போது, குறித்த யோசனைக்கு எதிராக வாக்களிக்க ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் உத்தர லங்கா சபாகய என்பன தீர்மானித்துளன. (நி-5)

# பேருந்து கட்டணத்தில் மாற்றமில்லை

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பேருந்து கட்டண அதிகரிப்பு அவசியமில்லையெனத் தெரிவித்துள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதால் புதிய திருத்தம் மேற்கொள்வது பொருத்தமற்றது என வலியுறுத்தியுள்ளது.

அதற்கமைய, 7 சதவீதத்தால் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க போக்குவரத்துச்சபை பரிந்துரைத்துள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்நார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 600 | 800 |
| தக்காளி | 300 | 400 | 300 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 250 | 280 |
| கோவா | 300 | 300 | 300 | 300 |
| கரட் | 350 | 500 | 450 | 550 |
| பூசணி | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 200 | 220 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 200 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 420 | 400 | 350 | 450 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 800 |
| போஞ்சி | 550 | 550 | 550 | 550 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 160 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 100 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 450 | 400 | — |
| முள்ளங்கி | 180 | 180 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | 200 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 156

### இன்பத்தை போல் துன்பத்தையும் ஏற்றுக்கொள்ள பழகுங்கள்

நமக்கு சோதனைகள், கஷ்டங்கள், துன்பங்கள் வந்தால் கடவுளிடம் நாம் கேட்பது "ஏன் எனக்கு மட்டும் இப்படி செய்கிறாய்?"

இந்தக் கேள்விக்கு ஒரு டென்னிஸ் வீரர் மிக அழகாக பதில் தந்திருக்கிறார்.

அந்த டென்னிஸ் வீரரின் பெயர் ஆர்தர் ராபர்ட் ஆஷ் ஜூனியர் விம்பிள்டன். ஓப்பன், யூ எஸ் ஓப்பன், ஆஸ்ட்ரேலியா ஓப்பன் ஆகிய மூன்று கிராண்ட்ஸ்லாம் டைட்டில்களையும் வென்ற ஒரே மகன். தொழில் முறை போட்டியில் இருந்து 1980 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற வீரர். 1983 ஆம் ஆண்டில் இதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட பொழுது ரத்தம் தானமாகப் பெற்றுக் கொண்டதன் மூலமாக அவருக்கு எய்ட்ஸ் வந்தது. அவரது ரசிகர்கள் மிகவும் வருத்தம் அடைந்தார்கள். அப்பொழுது பலரும் அவருக்கு எழுதிய கடிதத்தில் கேட்டது: "உங்களுக்கு கடவுள் ஏன் இப்படி செய்கிறார்?"

இதை அடிப்படையாகக் கொண்டு அவர் செய்தித்தாளில் ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையின் தலைப்பு: "வை மி?" "ஏன் எனக்கு மட்டும்?" கட்டுரையில் அவர் எழுதியது பின்வருமாறு: உலகில் எத்தனையோ மனிதர்கள் இருக்கும் பொழுது ஏன் எனக்கு மட்டும் எய்ட்ஸ் தந்தாய்?

குடிப் பழக்கம் உள்ளவர்கள் எத்தனையோ பேர் இருக்கும் பொழுது அந்தப் பழக்கம் இல்லாத எனக்கு, ஏன் எனக்கு மட்டும் எய்ட்ஸ் தந்தாய்?

சிகரெட் பிடிப்பவர்கள் எத்தனையோ பேர் இருக்கும் பொழுது அந்தப் பழக்கம் இல்லாத எனக்கு, ஏன் எனக்கு மட்டும் எய்ட்ஸ் தந்தாய்?

பல பெண்களிடம் தொடர்பு உடையவர்கள் பலர் இருக்கும் பொழுது அந்தப் பழக்கம் இல்லாத எனக்கு, ஏன் எனக்கு எய்ட்ஸ் தந்தாய்? இப்படியாக நீண்டு கொண்டே போனது அந்தக் கட்டுரை. அதன் முடிவில் சொன்னார்.

இதனது தொடர்ச்சி அடுத்த வாரம்.

இதைப் படித்த மக்கள் அனைவரும் மிகவும் வருந்தினார்கள். அவர் என்னதான் பதில் தரப் போகிறார் என்று காத்திருந்தார்கள்.

அடுத்த வாரம் வை மி பகுதி II ஏன் எனக்கு மட்டும் பாகம்-2 வெளிவந்தது.

அதில் அவர் எழுதியிருந்தார்.

உலகில் 500 லட்சம் பேர் டென்னிஸ் விளையாடத் துவங்குகிறார்கள். அதில் 50 லட்சம் பேர் தான் டென்னிஸ் கற்றுக் கொள்கிறார்கள்.

அதில் 5 லட்சம் பேர் தான் தொழில்முறை டென்னிஸ்ற்கு வருகிறார்கள். அதில் 50.000பேர் தான் சர்க்யூட் லெவல் டென்னிஸ்ற்கு முன்னேறுகிறார்கள்.

அதில் 5000 பேர் தான் கிராண்ட்ஸ்லாம் லெவல் டென்னிஸ் இற்கு முன்னேறுகிறார்கள்.

அதில் 50 பேர் தான் விம்பிள்டன் விளையாடுகிறார்கள். அதில் 4 பேர் தான் அரையிறுதிக்கு வருகிறார்கள். அதில் 2 பேர் தான் இறுதிப் போட்டிக்கு வருகிறார்கள்.

அதில் ஒருவர் தான் வெற்றி பெறுகிறார். அந்த வெற்றி பெற்ற ஒருவராக, அந்த வெற்றிக் கோப்பையை கையில் மகிழ்ச்சியோடு தாங்குபவராக என்னை கடவுள் ஆக்கிய பொழுது நான் கேட்கவில்லை "ஏன் எனக்கு மட்டும்?" என்று.

"வெற்றி மேல் வெற்றி தந்த பொழுது நான் கடவுளிடம் கேட்கவில்லை ஏன் எனக்கு மட்டும் என்று".

"பேரும் புகழும் குவிந்தன. அப்போது கடவுளிடம் கேட்கவில்லை ஏன் எனக்கு மட்டும் என்று".

"பணம் மழை போல் கொட்டியது. அப்பொழுது கேட்கவில்லை ஏன் எனக்கு மட்டும் என்று".

"அப்போதெல்லாம் கேட்காத நான் இப்பொழுது கேட்பதற்கு என்ன தகுதி இருக்கிறது? நான் கேட்க மாட்டேன். கடவுள் இது வரை தந்ததை எப்படி மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேனோ அது போல இதையும் நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன்."

இதுவரை எனக்காக வாழ்ந்த நான் இனி பிறருக்காக வாழப் போகிறேன். என்னுடைய பணம், புகழ், செல்வம், மீதமுள்ள வாழ்நாள் அனைத்தையும் இந்த நோய் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இதற்கான மருந்து தயாரிக்கும் ஆராய்ச்சிகளிலும் நான் செலவு செய்யப் போகிறேன். கடவுள் அனைவரையும் ஆசீர்வதிக்கட்டும். நன்றி. என்று முடித்திருந்தார்.

"இன்பம் வந்த போது ஏனென்று கேட்காத நாம் துன்பம் வரும் போது மட்டும் ஏன் என்று கேட்பது எப்படி சரியாக இருக்க முடியும்?" இன்பம், துன்பம் இரண்டையும் கடவுளே தருகிறார். இரண்டுமே நம் நன்மைக்குத்தான் என்று உணர்வோம். வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்போம்.

## படுத்துக்கொண்டே ஓடும் ரயர்கள் இல்லாத உலகின் மிகச் சிறிய கார்



(ரோம்)

தொழில்நுட்பம் மிகவும் வளர்ந்து விட்ட இந்தக் கால கட்டத்தில் கார் தயாரிப்பிலும் பல்வேறு புதுமைகளைச் செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் இத்தாலியில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கார் தொடர்பான வீடியோ டுவிட்டரில் வெளியாகி பயனர்களை வியப்படைய செய்துள்ளது.

அந்தக் காரில் ரயர்கள் கிடையாது. தரையில் பாம்பு போல ஊர்ந்து செல்லும் இந்தக் கார் உலகின் மிகச் சிறிய கார் என சமூக வலைத்தள பயனர்களால் அழைக்கப்படுகிறது.

இந்தக் காரை உருவாக்கும் முழு செயல்முறையும் யூடியூப் சேனலான கார்மகெதோனில் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காரில் உள்ளே டிரைவர் படுத்துக்கொண்டு இயக்குவது வீடியோவில் தெரிகிறது. காரின் மேல் பகுதி மட்டும் வெளியே தெரியும்.

ஆனால் கண்ணாடியின் கீழ்ப் பகுதி, என்ஜின் இருக்கும் முன்பகுதி மற்றும் பொருட்கள் வைக்கப்படும் பின்பகுதி என அனைத்தும் காணவில்லை.

மேலும் ரயர் கூட இல்லாமல் இயங்கும் இந்தக் காரை மக்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கும் காட்சிகள் வீடியோவில் உள்ளது.

இந்தக் கார் எப்படி இயங்குகிறது என்பது குறித்தும் வீடியோவில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரை வடிமைத்த வாலிபர்களுக்கு சமூக வலைத்தள பயனர்கள் பாராட்டி கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள். (நி-5)

## ஆபிரிக்க சி...
## பிரான்ஸ்...

❖ வாகனங்க...
❖ 100 இற்கும்...
❖ பதற்றத்தை...

(பாரிஸ்) —
பிரான்ஸ் தலைநகர்...
நிறுத்தாமல் சென்ற 1...
பொலிஸார் சுட்டுக் கொ...
வெடித்துள்ளன.



## தென்னாபிரிக்காவில் சூறாவளி 4 பேர் உயிரிழப்பு



(பிரிட்டோறியா)

தென்னாபிரிக்காவில் கனமழை மற்றும் சூறாவளி தாக்கியதில், நான்கு பேர் இறந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் சக்தி வாய்ந்த காற்று மற்றும் மழையால் வீதிகள் சேதமடைந்தன.

மற்றும் வீடுகள், கழிவுநீர் அமைப்புகளை வெள்ளம் சூழ்ந்தது.

அதைத் தொடர்ந்து துறைமுக நகரமான டர்பனின் வடக்கே சூறாவளி தாக்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## திடீரென சிவப்பு ...
## ஜப்பான் நா...

(டோக்கியோ)

ஜப்பான் - ஒகினாவா மாகாணத்தில் உள்ள நாகோ நகர நதி, திடீரென சிவப்பு நிறமாக மாறியுள்ளது.

மதுபான ஆலையில் உள்ள குளிரூட்டும் அமைப்பு ஒன்றில் இருந்து உணவில் நிறத்திற்காகச் சேர்க்கப்படும் சாயம் கசிந்ததால் நதியின் நிறம் மாறியதாகத் தெரிய வந்துள்ளது.

பீர் தயார...
யான ஓரிய...
நிறுவனம் ...
அறிக்கையி...
கப்பட்டுள்ளது...
உணவுக...
காகச் சேர்க்க...
ஆற்றில் கசி...
ணீர் நிறம் ...
இதனால் சுகா...
கள் எதுவும் ...
றும் அத்துடன்...

## மெக்சிகோவை மிரள ...
## நூற்றுக்கணக்கா...

(மெக்சிக்கோ)

மெக்சிகோவில் கடும் வெப்பம் காரணமாக 100 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் அதிகளவானோர் வெப்பத்தின் தாக்கத்தினால்

உயிரிழந்துள்...
சில மரணங்...
காரணமாக ...
ள்ளதாகவும் ...
டுள்ளது.
இதேவேளை...
ண்டு வாரங்க...
செல்சியஸ் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# கக சிறுவனை சுட்டுக்கொன்ற பொலிஸார்

# ன்ஸில் வெடித்தது கலவரம்!

### ரங்களுக்கு தீ வைப்பு
### ற்கும் மேற்பட்டோர் இதுவரை கைது
### த்தை தணிக்க பொலிஸார் குவிப்பு



**லைநகர் பாரிஸில் வாகன சோதனையின் போது காரை சென்ற 17 வயதே ஆன ஆபிரிக்க வம்சாவளி சிறுவனை டுக் கொன்ற நிலையில் அந்நகரம் முழுவதும் போராட்டங்கள் ா.**



அமைதியை நிலைநாட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

பாரிஸ் நகரின் நான்டெர் புறநகர்ப் பகுதியில் பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு சோதனை நடைபெற்ற போது அவ்வழியாக கார் ஒன்று வேகமாக வந்ததாகக் கூறப்படுகிறது. அந்தக் காரை பொலிஸார் நிறுத்த உத்தர விட்டும் அது நிறுத்தப்படாததால் அதனை விரட்டி சுற்றி வளைத்துள்ளனர்.

பின்னர் காரில் இருந்த ஆபிரிக்க சிறுவனை துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் அச்சிறுவன் உயிரிழந்தார்.

இது பாரிஸ் மக்களை கொதிப்படையச் செய்துள்ளது.

பாரிஸ் இன ரீதியாக பன்முகத்தன்மை கொண்ட பகுதியாக அறியப்படுகிறது. இங்கே பல்வேறு இனத்தவர், கலாசாரத்தைப் பின்பற்றுபவர்கள் வாழ்கின்றனர்.

இந்நிலையில் கறுப்பின இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு கடும் எதிர்ப்புக் குரல் கிளம்பியுள்ளது.

வடக்கு நகரான லில்லி, டோலூஸ், தென்மேற்கு நகரங்களான அமியன்ஸ், டிஜோன், எஸ்ஸோன் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர்.

குப்பைத் தொட்டிகளுக்குத் தீவைத்து தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

எஸ்ஸோன் பகுதியில பேருந்து ஒன்றை நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டு விட்டு அதற்கு தீ வைத்தனர்.

இன்னும் சில பகுதிகளில் கார்கள், பொலிஸ் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 667 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

## வப்பு நிறமாக மாறிய நாகோ நகர நதி

பீர் தயாரிப்பு ஆலையான ஓரியன் ப்ரூவரிஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உணவுகளில் நிறத்திற்காகச் சேர்க்கப்படும் சாயம் ஆற்றில் கசிந்ததால் தண்ணீர் நிறம் மாறியதாகவும் இதனால் சுகாதார அபாயங்கள் எதுவும் இல்லை என்றும் அத்துடன் மிகப் பெரிய பிரச்சினை மற்றும் கவலையை ஏற்படுத்தியதற்காக மன்னிப்பும் கோரியுள்ளது.

மேலும் இது போன்ற சம்பவம் மீண்டும் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த நிறுவனம் உறுதியளித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (நி-5)

## கனடாவில் காட்டுத் தீயால் மோசமடையும் காற்றின் தரம்

(வோஷிங்டன்)

கனடாவின் ஆல்பர்ட்டா பகுதியில் கடந்த மாதம் பயங்கர காட்டுத் தீ ஏற்பட்டது. 76 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் இந்த காட்டுத்தீ எரிந்து வருகிறது.

இதன் காரணமாக சுமார் 160 மில்லியன் டன் கார்பன் இதுவரை வெளியிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அண்டை நாடான அமெரிக்காவின் டெட்ராய்ட், சிகாகோ மற்றும் மினியாபோலீஸ் நகரங்களில் காற்றின் தரம் மிகவும் மோசம் அடைந்துள்ளது.

இதனால் அங்கு சுமார் 8 கோடி மக்கள் மோசமான காற்றை சுவாசிப்பதாக அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த புகையினை சுவாசித்தால் மூச்சுத்திணறல் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்கள் தேவையில்லாமல் தங்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் எனவும், அவ்வாறு வெளியில் செல்லும் போது என்-95 முகக் கவசங்களை அணிந்து கொள்ளும் படியும் அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

## மிரள வைத்த கடும் வெப்பம் னக்கானோர் உயிரிழப்பு

உயிரிழந்துள்ளதாகவும் ஒரு சில மரணங்கள் நீரிழப்பு காரணமாக இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இரண்டு வாரங்களில் 50 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் சில நகரங்களில் வெப்பநிலை இன்னும் அதிகமாகவே காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)



## பலரையும் வியப்பில் ஆழ்த்திய ஆண் ஒருவரின் உலக சாதனை

(மாட்ரிட்)

பெண்களின் 2.76 அங்குலம் குதி உயர்ந்த (ஹை ஹீல்ஸ்) பாதணிகளை அணிந்த நிலையில் 100 மீற்றர் தூரத்தை 12.82 விநாடிகளில் ஓடி முடித்து ஸ்பெயினைச் சேர்ந்த கிறிஸ்டியன் ரொபர்ட்டோ லோபஸ் ரொட்ரிகஸ் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இதேவேளை ஜேர்மனியைச் சேர்ந்த அன்ட்ரே ஓர்டோல்வ் 2019 ஆம் ஆண்டில் 14.02 விநாடிகளில் ஓடியமையே, ஹை ஹீல்ஸ் ஓட்டத்தில் இதுவரை சாதனையாக இருந்தது.

இவர் பல்வேறு கின்னஸ் சாதனைகளை படைத்துள்ளார். இந்நிலையில், குதி உயர்ந்த பாதணியுடன் வேகமாக ஓடுவதற்கு தயாராகுவது சவாலாக இருந்தது என கூறியுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில்
# உதவித்திட்ட முறைகேடு தொடர்பில்
# பாதிக்கப்பட்டவர்களிடம் பதிவுகள் முன்னெடுப்பு

(குருமன்காடு)

**வவுனியா பிரதேச செயலகத்தில் “அஸ்வெசும” திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பயனாளிகளின் மேல் முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் பதிவுகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**



“அஸ்வெசும” திட்டத்தில் தெரிவு மற்றும் பதிவுகளில் முறைகேடுகள் நிலவுவதாக தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல மாவட்டத்தில் மக்களினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமையுடன் வவுனியா மாவட்டத்திலும் போராட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

பயனாளிகள் பட்டியலில் பெயர்கள் இடம்பெறாத அனைத்து விண்ணப்பதாரர்களும் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறும் மேன்முறையீட்டு காலம் முடிவடைந்த பின்னர் தகுதியானவர்களின் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வவுனியா பிரதேச செயலக பிரிவிலுள்ள 42 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தோணிக்கல், கூமாங்குளம், மூன்றுமுறிப்பு, வெளிக்குளம், கோவில்குளம் ஆகிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களின் மேல் முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் என்பன நேற்று வவுனியா பிரதேச செயலகத்தில் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் ஒன்லைன் மூலம் பதிவுகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பதிவுகளை முன்னெடுப்பதற்காக 10 இற்கும் மேற்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளமையுடன் 300 இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட பயனாளிகள் தங்களது ஆட்சேபனைகளை முன்வைத்து தமது பதிவில் திருத்தங்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)

## ருவென்வெலிசாயவில் இருந்து வவுனியாவிற்கு பாதயாத்திரையாக வந்த பிக்குகள்



(குருமன்காடு)

ருவென்வெலிசாய விகாரையில் இருந்து வவுனியாவில் உள்ள விகாரை நோக்கி பௌத்த பிக்குகள் பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரத்தில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ருவென்வெலிசாய விகாரையில் கடந்த வியாழக்கிழமை வணக்கத்திற்குரிய கல்காமு சாந்தபோதி பௌத்த பிக்கு தலைமையில் ஆரம்பமான குறித்த பாதயாத்திரையானது நேற்றுக் காலை வவுனியா கண்டி வீதியில் உள்ள விகாரையை வந்தடைந்தது.

அங்கிருந்து வவுனியாவில் தமிழர் பகுதியை கையகப்படுத்தி குடியேற்றம் செய்யப்பட்ட காலபோகஸ்வேவ பகுதியில் உள்ள சபுமல்கஸ்கட விகாரையை சென்றடையும். குறித்த பாதயாத்திரையில் 50 இற்கு மேற்பட்ட பௌத்த பிக்குகள், மறைந்த பௌத்த பிக்குகளின் கேசம், பற்சின்னம் உள்ளிட்ட புனிதப் பொருட்களுடன் சென்று அதனை அங்கு பார்வைக்கு வைப்பதுடன் எதிர்வரும் போயா தினத்தன்று விசேட பூஜை நிகழ்வையும் நடத்தவுள்ளனர். (நி-5-6-250)

## சந்தையில் தவறவிடப்பட்ட பல இலட்சம் பெறுமதியான நகைகளை உரிய நபரிடம் ஒப்படைத்த வர்த்தகர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் 8 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் வர்த்தகர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு உரிய நபாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வர்த்தகர் ஒருவர் தனது மனைவியிடம் இருந்து கைப்பையை பெற்று சென்றுள்ளார். அதற்குள் நகைகள் உள்ளது என்பதை அறியாமல் குறித்த வர்த்தகர் தவறவிட்டுள்ளார். அதன் பிறகு அதற்குள் நகைகள் இருப்பதை அறிந்த பின்னர் எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் நேற்று காலை குப்பை கொட்டும் இடத்தில் இருந்து குறித்த கைப்பை சக வர்த்தகர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு உரிய நபரிடம் ஒப்படைக்கப்பட்டது. குறித்த வர்த்தகரின் செயற்பாடு தொடர்பில் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகின்றது. (நி-5-6-271)

## சர்வதேச நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டம்
## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நீதி வேண்டி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது “ஊடக சுதந்திரத்தை காப்பாற்று, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், சர்வதேச விசாரணை வேண்டும்” என்ற கோசங்களை எழுப்பியவாறும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தமக்கு நீதி கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் தெரிவித்தனர். அதேபோல் கிளிநொச்சியிலும் காணாமல் போன தமது உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்திவலிந்து காணாமல் ஆக்கப்டோரின் உறவுகளால் போரட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6-250-315-316)








வவுனியாவில் உயர் ரக மிளகாய்ச் செய்கை தொடர்பான வயல்விழா நிகழ்வு நேற்று சமளங்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழ் உள்ள தெற்கிலுப்பைக்குளத்தில் உள்ள திலீப்மரியாஹுாஸின் தோட்டத்தில் இடம்பெற்றது. இதன்போது எம்ஜசிஏச் உயர்ரக மிளகாய்ச் செய்கையினால் கிடைக்கக் கூடிய பயன்கள், குறைந்த செலவில் அதிக இலாபத்தை ஈட்டும் வழிமுறைகள் தொடர்பில் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (படம்: வசந்தரூபன்)

# பண்டாரிக்குளம் பகுதியில் வாள்வெட்டு
## ஒருவர் காயம் - மூவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதிக்கு ஜீப் ரக வாகனம் மற்றும் மோட்டர் சைக்கிள் என்பவற்றில் வந்த குழுவினர் அப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது வாளால் வெட்டி விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

இதனையடுத்து, கிராம மக்கள் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூன்று பேரை கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த தாக்குதலில் ஈடுபட்டவர்களின் ஜீப் வண்டியும் மீட்கப்பட்டுள்ளதுடன், அதில் இருந்து இரு வாள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இச் சம்பவத்தில் பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய செல்வம் தவேந்திரன் என்பவர் வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பில் பண்டாரிக்குளம், மகாறம்பைக்குளம் மற்றும் வெளிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்மறுசீரமைப்பு விடயத்தில் மக்களை முட்டாள்களாக்க வேண்டாம்
## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

"உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு விடயத்தில் எதிர்க்கட்சிகள் எம்முடன் கைகோர்க்க வேண்டும். இல்லையேல் தங்களின் பாதையில் செல்ல வேண்டும். அதைவிடுத்து மக்களைப் பகடைக்காய்கள் ஆக்கக் கூடாது." என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பில் சந்திப்பு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துரைக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களை ஏறி மிதிக்கின்ற எந்தத் திட்டங்களையும் சட்டங்களையும் நாம் முன்னெடுக்க மாட்டோம். நாட்டின் நலன் கருதியும் நாட்டு மக்களின் எதிர்கால நலன் கருதியுமே திட்டங்களை நாம் முன்னெடுக்கிறோம். எமது ஆட்சியில் எந்தச் சட்டமும் மக்களுக்குப் பாதகமாக அமையாது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக உண்மைக்கு புறம்பான தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இதேவேளை, எதிர்க்கட்சிகள் தங்கள் வாக்கு வங்கிக்காக மக்கள் மத்தியில் பொய்ப் பிரசாரத்தை முன்னெடுக்கின்றன.

நாடு முன்னோக்கி செல்ல வேண்டுமெனில் எதிர்க்கட்சியினர் எம்முடன் கைகோர்க்க வேண்டும். இல்லையேல், தங்கள் பாதையில் செல்ல வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதைவிடுத்து மக்களைப் பகடைக்காய்கள் ஆக்கக்கூடாது." என அவர் தெரிவித்தார். (ஞி)

# நிதி மோசடி தொடர்பில் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து பெண் ஒருவரை குடிவரவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். வெளிநாட்டுக்கு அனுப்புவதாக மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு 53 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய குறித்த பெண் இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய வேளையில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பத்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய பெண் என தெரியவந்துள்ளது. 1.3 மில்லியன் ரூபாய் பண மோசடி செய்ததாக குறித்த பெண் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஞி-5)


# கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்(வ-து)
## பதவி வெற்றிடம்

**பதவிகளும் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளும் (02/2022 இன்படி)**

**1) 208/15 களஞ்சியமுகாமையாளர்/கிளைமுகாமையாளர்-வெற்றிடம் 01**

சம்பள அளவுத்திட்டம்- 17435-145X10-160X10-20485

அ)கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர்(சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**2) 208/16 களஞ்சிய முகாமையாளர்/கிளை முகாமையாளர் -வெற்றிடம் 03**

சம்பள அளவுத்திட்டம் - 16975-135X10-150X10-19825

அ)கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. அல்லது க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி. கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆளணி அங்கீகாரப்படி மேற்படி பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1) வயது 18-45.
2) சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
3)சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4) கூட்டுறவுச் சங்கத்தில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5) தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி 17.07.2023 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெல்லியடி, கரவெட்டி என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோஅனுப்பி வைக்க வேண்டும்.

**தலைவர்,** (சி-6847)
**கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,**
**நெல்லியடி, கரவெட்டி.** 021 226 3263


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2865

யஸ்மிகா

ஸ்கூல் படிக்கும்போது நீ வரைஞ்ச மிகச் சிறந்த ஓவியம் எதுன்னு கேட்டா...



அது "அமீபா" தான். அது ஒன்னுதான் எப்படி தப்பா வரைஞ்சாலும் அமீபா மாதிரியே இருக்கும்...

பிரநிஷா

மிளகாய்த் தூள் அரைச்சிட்டு வா ன்னு சொன்னதுக்கு




மூதேவி வீட்ல இருந்த மிளகாய்த் தூள தூக்கின்னு போயிருக்குது... வரட்டும் வச்சிக்கிறன்..

சுபாஷ்

பெத்தவங்க செஞ்ச பாவம் பிள்ளைங்களைத்தான் போய் சேருமுன்னு நினைச்சிட்டிருந்தேன்...



லேட்டாத்தான் தெரிஞ்சுக்கிட்டேன் அவங்க செஞ்ச பாவமே நான்தானென்று

காருணிகா

இதயம் பலவீனமா இருக்கு... அதிர்ச்சி தர்ற. எதையும் கண்ணுல காட்டாதீங்கன்னு சொன்னேனா இல்லியா...?



சொல்லச் சொல்ல கேக்காம "கல்யாண அல்பத்" தை எடுத்து பார்த்தாரு டாக்டர்...!

கமல்

ஒரு கடையில நாம வாங்க போன பொருள் இல்லனு எதிர்க் கடயில வாங்கப் போனா



ஏதோ இந்தியால இருந்து பாகிஸ்தான் போன மாதிரியே பார்க்குறானுங்க...

திசா

எங்க அம்மா அப்பவே படிக்க சொல்லிச்சு நான் தான் கேக்கல...
ஏன் மாப்ள வேல ஏதும் கிடைக்கலையா...
இல்ல மாப்ள என் ஆளு இங்கிலிஷ்ல அனுப்புற மெஸேஜ் புரியவே மாட்டிங்குது...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 218





"இல்லை, இல்லை என்னைப் போலவே அந்த நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடிய சில கயல் மீன்களைக் கண்டேன். அந்தக் கயல் மீன்கள் இந்தச் சோழ நாட்டுப் பெண்களின் கண்களை நினைவூட்டின. நதியின் நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டவனாவது எப்படியோ தப்பிப் பிழைக்கலாம். ஆனால் இந்தச் சோழ நாட்டுப் பெண்க்ளின் விழிச் சுழலில் அகப்பட்டுக் கொண்டவன் ஒரு காலும் தப்பிப் பிழைக்க முடியாது என்று எண்ணிக் கொண்டேன்!."

"இம்மாதிரி பெண்களைக் குற்றம் கூறி பழி சொல்வதில் சிலருக்கு ஒரு பெருமை. தாங்கள் செய்யும் தவறுக்குப் பெண்களின் மீது குற்றம் சொல்வது ஆண் பிள்ளைகளின் வழக்கம்."

"அந்த வழக்கத்தைத்தான் நானும் கைப்பற்றினேன். அதில் என்ன தவறு?" என்றான் வந்தியத்தேவன்.

அச்சமயம் அரண்மனைக் குள்ளேயிருந்து இனிய குழலோசை கேட்டது. அதைத் தொடர்ந்து தண்டைச் சிலம்புகளின் கிண்கிணி ஒலியும் மத்தளத்தின் முழக்கமும் கலந்து வந்தன. பின்னர், இளம் பெண்களின் இனிய குரல்கள் பல சேர்ந்து ஒலித்தன. சிலப்பதிகாரக் காவியத்தில் உள்ள பின் வரும் ஆய்ச்சியர் குரவைப் பாடலைப் பாடினார்கள்:

"கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன் இன்று நம் ஆனுள்வருமேல்

அவன் வாயில் கொன்றையந் தீங் குழல் கேளாமோ தோழீ!

கொல்லையஞ் சாரற் குருந் தொசித்த மாயவன்

எல்லைநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்

முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

பாடல் முடியும் வரையில் குந்தவையும் வந்தியத்தேவனும் அதன் இனிமையில் ஈடுபட்டுத் தம் வசமிழந்து நின்றார்கள். மறுபடியும் வாத்திய முழக்கத்துடன் ஆடல் தொடங்கியதற்கு அறிகுறியாகத் தண்டைச் சதங்கைகளின் ஒலி எழுந்தது.

"அரண்மனையில் குரவைக் கூத்து நடக்கிறது போலும்! கடம்பூர் மாளிகையில் குரவைக் கூத்து ஒன்று பார்த்தேன். அது முற்றும் வேறு விதமாயிருந்தது!" என்றான் வல்லவரையன்.

"ஆம் என் தோழிகள் குரவைக் கூத்துப் பயில்கிறார்கள். சீக்கிரத்தில் என்னைக் காணாமல் தேடத் தொடங்கி விடுவார்கள். தாங்கள் வந்த காரியம் என்ன?" என்று இளைய பிராட்டி குந்தவை தேவி கேட்டாள்.

"இதோ நான் வந்த காரியம் தங்கள் தமையனாரின் ஓலை. எத்தனையோ அபாயங்களுக்குத் தப்பி, நீர்ச் சுழல்கள் விழிச் சுழல்களிலிருந்து காப்பாற்றி, இதைக் கொண்டு வந்தேன்!" என்று வல்லவரையன் கூறி ஓலையை எடுத்து நீட்டினான்.

### நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்
### விந்தையினும் விந்தை!

குந்தவைப் பிராட்டி வந்தியத்தேவன் நீட்டிய ஓலையைப் பெற்றுக் கொண்டு படித்தாள். அதுவரையில் நெரிந்த புருவங்களுடன் சுருங்கியிருந்த அவள் முகம் இப்போது மலர்ந்து பிரகாசித்தது.

வல்லவரையனை நிமிர்ந்து நோக்கி, "ஓலையைக் கொடுத்து விட்டீர். இனி என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டாள் குந்தவை தேவி. "தங்களிடம் ஓலையைக் கொடுத்ததுடன் என் வேலையும் முடிந்து விட்டது. இனி, நான் ஊருக்குத் திரும்ப வேண்டியதுதான்."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## புதுச் செருப்பு



ஒரு நாள் முல்லா, தான் வாங்கிய புத்தம் புதுக் காலணிகளை அணிந்து பெருமிதத்தோடு தெருவில். நடந்து போய்க் கொண்டிருந்தார். ஆலமரத்து நிழலில் ஒரு சிறுவர் கூட்டம் விளையாடிக் கொண்டிருந்தது.

அவர்களில் ஒருவன் முல்லா அணிந்து வந்த புதிய செருப்புக்களைப் பார்த்து விட்டான். "டேய் நம்ம முல்லாஜி போட்டு வரும் செருப்பைப் பாருங்க எவ்வளவு அழகு" என்றான்.

"அடேங்கப்பா! என்ன பளபளப்பு! அதில் முகம் பார்க்கலாமே. அதோடு ரசம் பூசப் பட்ட கண்ணாடிச் சில்லுகளைப் பதித்து இருக்கின்றனர். அதில் சூரிய ஒளி பட்டுத் தெறித்து வர்ண ஜாலம் காட்டுகிறது பார்", என்று சிறுவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

அப்போது ஒரு சிறுவன், "டேய் இந்தச் செருப்புகளைத் தந்திரமாக அவரிடமிருந்து பறித்து விட வேண்டும். செய்யலாமா?" என்றான்.

"கண்டிப்பாக செய்யலாம்!" என்று எல்லாச் சிறுவர்களும் ஒரே குரலில் ஆமோதித்தனர். இப்படி இவர்கள் திட்டம் போட்டுப் [illegible] முடிப்பதற்கும் முல்லா களைப்பு தீர மர நிழலில் சற்று ஓய்வெடுக்கலாம் என்று எண்ணி அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

"வாங்க மாமா !" என வரவேற்றான் ஒருவன். "என்னடா? பசங்களா, வரவேற்பு பலமாக இருக்கிறது," என்றார் முல்லா. "ஒன்றுமில்லை!" என்றான் ஒரு சிறுவன். வேறு ஒருவன் அவரைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்[illegible] லோடு. அப்போது, கூட்டத்திலிருந்து ஒரு பொடியன் முன்னால் வந்து, "முல்லா மாமா, இந்த நோஞ்சான் பையன் சொல்கிறான், இந்த ஆல மரத்தின் மீது யாராலுமே ஏற முடியாதாம்!" என்றான்.

"பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூவுலகமே இருண்டு போய் விடுமா? அவன் சோம்பேறியாக இருப்பதால் மரம் ஏற முடியாது. எனவே, யாராலும் முடியாது எனத் தவறாக முடிவு கட்டிவிட்டான்," என்றார் முல்லா.

"அப்படி என்றால் உங்களால் முடியுமா?" என்றான் பொடியன். "அது இருக்கட்டும், ஏன் உங்களில் யாராவது ஒருவன் மரம் ஏறிப் பார்ப்பது தானே," என்றார் முல்லா. முயன்று பார்த்து விட்டோம் முடியவில்லை" என்றான். "அப்படியானால் விட்டுத் தள்ளுங்கள். இந்த மரத்தில் ஏறி விடுவதால் மட்டும் பெரியதாக என்ன பயன். ஏற்பட்டு விடப் போகிறது?" என்றார் முல்லா சாதுர்யமாக. "டேய் அவருக்கு வயதாகிப் போச்சுடா அதான் நழுவுறாருடா!" என்றான். "இனி மேல் நாம் அவரை முல்லா மாமா என்று கூப்பிட வேண்டாம். முல்லா தாத்தா என்று கூப்பிடுவோம்," என்றான் பொடியன் ஒருவன். உடனே எல்லாச் சிறுவர்களும் அவரை , "தாத்தா! தாத்தா," என்று கூப்பிட்டுக் கேலி செய்தனர்.

முல்லாவால் இந்த அவமானத்தைப் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. அவர்களைப் பார்த்து , "யாருக்கு வயதாகி விட்டது? ஹூம் எனக்கா ? இதைப் போல் பத்து மரங்களில் ஒரேநாளில் ஏறி இறங்குவேன் தெரியுமா ?"" என்று சவால் விட்டார். "பத்து மரம் வேண்டாம். இந்த ஒரே மரத்தில் ஏறி இறங்குங்க. அது போதும்!" என்றான் நோஞ்சான் சிறுவன். அப்பத்தான் உங்களை முல்லா மாமா! என்று கூப்பிடுவோம் என்றனர் சிறுவர்கள் அனைவரும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### தபால் தலை வெளியீடு

1956இல் விஜயனின் வருகை என்ற தலைப்புடன் சிறப்பு தபால் தலை ஒன்றை இலங்கை அரசு வெளியிட்டது. குவேனி ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பது போல்வும், கப்பலில் வந்த விஜயன் அவளிடம் அடைக்கலம் கோருவது போலவும் இந்த தபால் தலை அமைந்திருந்தது. தபால் தலையை பார்த்த சிங்கள தலைவர்கள், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல. தவிரவும், விஜய்ன் வந்த போதே இங்கு குவேனி என்ற தமிழ்ப் பெண் இருந்திருக்கிறாள் என்று கூறினால், இலங்கையின் பூர்வகுடிகள் தமிழர்கள் என்பதை நாமே ஒப்புக் கொண்டது போலாகிவிடும். எனவே, இந்த தபால் தலையை வாபஸ் பெற வேண்டும் என்று கூறினார்கள். இதன் பிறகு தபால் தலை வாபஸ் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### பண்டுவாசுதேவன் (கி.மு. 504-474)

பண்டுவாசுதேவன் (கி.மு. 504-474) அல்லது பண்டு வாசுதேவன் இலங்கையின் முதலாவது அரச மரபின் இரண்டாவது அரசனாவான். இவன் முதலாவது அரச மரபைத் தோற்று வித்தவனும் முதல் அரசனுமான கலிங்க இளவரசன் விஜயனின் மருமகன் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. ஆனால் மகாவம்சத்துக்கு முன்னர் இயற்றப்பட்ட தீபவம்சம் இவனை பண்டுவாசன் என்று குறிப்பிடுவதைக் கொண்டு இவன் பாண்டிய நாட்டில் இருந்து வந்தனர் என்றும் வரலாற்றறிஞர்கள் வாதிடுகின்றனர். இதற்கு ஆதாரமாக விஜயன் பாண்டியனின் மகளை மணந்ததைக் குறிப்பிட்டு மீண்டும் இலங்கையை ஆள ஆட்சியாளர் இல்லை என்பதால் பண்டுவாசனை பாண்டியன் இலங்கைக்கு அனுப்பியதாக குறிப்பிடுகின்றனர். கி.மு 505 இல் விஜயன் வாரிசு இல்லாமல் இறந்தான்.




விஜயன் வருகை பற்றி இலங்கை அரசு வெளியிட்டு பிறகு வாபஸ் பெற்றுக் கொண்ட தபால் தலை!!

### உபதீசன் (கி.மு 505-504)

உபதீசன் ஆரிய இளவரசனான விஜயன் என்னும் இலங்கை மன்னனின் புரோகிதரும், பிரதான அரசாங்க அமைச்சனும் ஆவான். உபதீச காமம் எனும் பெயரில் ஒரு நகரத்தைக் கட்டி அதற்குத் தன் பெயரையே சூட்டிக் கொண்டான்.

உபதீசன் இளவரன் விஜயனின் இறப்பின் பின்பாக சிறிது காலம் ஆட்சியில் இருந்தான். நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டது. விஜயனுக்கு வாரிசுகள் இன்மையால் தென்னிந்தியாவில் இருந்து பண்டு வாசு தேவன் வரவழைக்கப்பட்டான்.

### மகாவம்சம் கூறும் பண்டுவாசு தேவன் இலங்கை வரவு

சிறிதுகால இடைவெளியின் பின்னர் கலிங்க நாட்டில் இருந்த பண்டு வாசு தேவன் அழைத்து வரப்பட்டு முடிசூட்டப்பட்டான். இளவரசன் பண்டு வாசுதேவன் பிரபுத்துவ குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களான உதவியாளர்களுடன் வந்ததாக இலங்கைச் சரித்திரம் கூறும் நூலான மகாவம்சம் கூறுகின்றது. கலிங்க நாட்டிலிருந்து வந்த இளவரசியான புத்த காஞ்சனா என்பவளை பண்டுவாசுதேவன் மணம் செய்து கொண்டான். புத்தகாஞ்சனா பண்டைய அரச குடும்பத்தைச் சேர்ந்தவளும் புத்தரின் ஒன்று விட்ட சகோதரனுமான பாண்டா என்னும் அரசனுடைய மகளாவாள். இவர்களுக்குப் பத்து ஆண் மக்களும், உம்மத சித்தா என்னும் ஒரு பெண் பிள்ளையும் இருந்தனர். மூத்த மகன் அபயன் என்பவனாவான். இவனது இறப்பின் பின்னர் இவனது மூத்த மகன் அபயன் அரசனானான்.

### அபயன் அல்லது அபய (கி.மு 474-454)

அபயன் அல்லதுஅபய (ஆட்சிக் காலம்: கி.மு 474-454) என்பவன் இலங்கையின் முதலாவது அரச மரபில் வந்த மூன்றாவது அரசனாவான். இவன், இவனுக்கு முன்னர் இலங்கையை அரசாண்ட பண்டு வாசுதேவனின் மூத்த மகனாவான். இவனுக்கு ஒன்பது சகோதரரும் உம்மதசித்தா என்னும் சகோதரியும் இருந்தனர்.

### தீசன் (கி.மு. 454- கி.மு 437)

தீசன் அல்லது திஸ்ஸா கி.மு 454 - கி.மு 437 இல் உபதீசகாமம் (இலங்கை) மன்னராக இருந்தார். மூத்த சகோதரரான அபய மன்னன் அரியணையில் இருந்து அகற்றப்பட்ட பிறகு, தீசன் தனது எட்டு இளைய சகோதரர்களால் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார்.

தீசன் தனது மருமகன் பண்டுகாபயனுடன் (பண்டுவாசு தேவன் பேரன்) போர் புரிந்த போது பண்டுகாபயாவை தோற்கடித்த பின்னரே தான் புனிதப்படுத்தப்பட்ட ராஜாவாக இருக்க முடியும் என்று கூறினார். இருப்பினும், அவன் தனது எட்டு இளைய சகோதரர்களுடன் போரில் கொல்லப்பட்டார். அபயன் காப்பாற்றப்பட்டார். மறுக்க முடியாத வெற்றியாளரான பாண்டுகாபயன், தனது மாமா அபயனை மீண்டும் அரியணை ஏற அழைத்தார். அபயன் மறுத்துவிட்டார்.

### அநுராதபுர யுகம்

இலங்கை மத்திய வங்கியின் இணையத் தளத்தில் கூறப்பட்டுள்ளபடி, தன் தலைநகரத்தின் பெயரினால் அழைக்கப்படும் அநுராதபுர இராசதானி (கி.மு377 - கி.பி.1017) பண்டையஇலங்கையில்நிறுவப்பட்ட முதலாவது இராசதானியாக விளங்கியது. கி.மு377 இல் மன்னன் பண்டுகாபயவினால் நிறுவப்பட்ட இந்த இராசதானிகாலத்திற்குக் காலம் ஆங்காங்கே சுதந்திரமான ஆட்சிகள் தோன்றினாலும் கூட நாடு முழுவதும் அதன் அதிகாரம் பரவிக் காணப்பட்டது.

அநுராதபுர இராசதானிக் காலகட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் நாணயப் பயன்பாடு பற்றிய அநேகமான தகவல்கள் கல்வெட்டுக்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. அக்காலத்தில் நாணயத்தயாரிப்பு மற்றும் விநியோகம் மிகவும் முறைசார்ந்த அடிப்படையில் நடைபெற்றுள்ளதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது. நாணயத் தயாரிப்புக்குப் பொறுப்பான பணிப்பாளர் அக்காலத்தில் "ரூபடக" என அழைக்கப்பட்டுள்ளார் (பெரிய கடுவிஹாரைகல்வெட்டு). அதே போன்று தயாரிக்கப்பட்ட நாணயங்களை அங்கீகரிப்பவர் "ரூபவார" என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளார் (கதுறுவெவ கல்வெட்டு).

### அநுராதபுர யுகத்திலிருந்த அரசர்கள் பற்றி ......

இலங்கை வரலாறு தலை நகரங்களை அடிப்படையாக கொண்டதாக காணப்படுவது சிறப்பாகும். இவ்வாறான அரசியல் வரலாற்றில் அனுராதபுரத்திற்கு தனிச்சிறப்பிடம் வழங்கப்படுகிறது. இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது இராசதானியாக அனுராதபுர இராசதானி காணப்படுகிறது. இதன் முக்கிய சிறப்பாக கூறப்படுவது நீர்ப்பாசன தொழினுட்பவியல் வளர்ச்சி மிக உன்னத நிலையினை அடைந்தமையாகும். இவ் வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்காற்றியவர்களாக சமகால மன்னர்களைக் கூறலாம்.

அனுராதபுரத்தினை தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னர்கள் பற்றிநோக்குமிடத்து, அனுராதபுர இராசதானியானது மிக நீண்டகாலம்நிலை பெற்றிருந்தமையினால் ஏராளமான மன்னர்கள் அதனைஆட்சி செய்தனர் என்பது நோக்கத்தக்கது. அவர்களை பற்றி அறிந்து கொள்ள எமக்கு உதவும் மிக முக்கிய வரலாற்று நூலாய் அமைவது மகாவம்சமாகும். இந்நூலின் அடிப்படையிலேயே அனுராதபுர இராசதானியின் மன்னர்களினை வரிசைப் படுத்தி நோக்க முடியும் என்பது இந்நூலின் சிறப்பாகும்.

எமக்கு கிடைக்கின்ற மூலாதார சான்றுகளின் அடிப்படையில் நோக்குவோமாயின் அரசனே நிருவாக அதிபதியாக விளங்கினான் என்பது கண்கூடு. அரச உரிமைகள் பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்பட்டு வந்த மரபுகளின் அடிப்படையில் பின்பற்றப்பட்டது.

அரசியல் ஸ்தாபனங்கள், அவற்றின் ஆரம்பத்தினை பார்ப்பின் அவை ஆரியரின் வருகையுடன் ஆரம்பித்ததாக கூறப்படுகிறது. ஆதியில் இங்கு குடியேறிய ஆரியரது நேரடிசந்ததி என்று கூறிக் கொண்டோரே வரலாற்றின் ஆரம்பத்தில் அநுராத புரத்தில் ஏகத் தலைவர்களாக விளங்கினர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லையில்...

முல்லைத்தீவைச் சேர்ந்த குணரட்ணம் ரெஜின்ரன் ரெஜினோல்ட் (வயது-48) என்பவராவார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (4-7,60)

## ஓகஸ்ட் முதல்...

மாக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் முச்சக்கர வண்டி சங்கத்தினர் மற்றும் மாநகர சபை ஆணையாளர் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது குறித்த விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் யாழ்.மாவட்ட முச்சக்கரவண்டிகள் சங்கத்தில் பதிவினை மேற்கொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கட்டண மீற்றர்களை பொருத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து குறித்த நடவடிக்கைகளை பின்பற்றாத முச்சக்கரவண்டிகள் சேவையில் ஈடுபட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7,33)

## பாராளுமன்றில்...

07ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தவும் பாராளுமன்றநடவடிக்கைதொடர்பான தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது. (4-7)

## 3 வகையான...

அரிசி ஏழு ரூபாயினாலும் ஒரு கிலோ சிவப்பு அரிசி இரண்டு ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

அவற்றின் புதிய விலை முறையே 168 ரூபாயாகவும் 135 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (4-7)

## குறைவடைந்தது...

ஒரு அலகிற்கு 30 ரூபாயில் இருந்து 10 ரூபாய் வரை குறைக்கப்படும். மாதாந்த கட்டணம் 400 ரூபாயில் இருந்து 150 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

60 அலகுகளுக்கு கீழ் உள்ள பிரிவில் ஒரு அலகுக்கான கட்டணம் 42 ரூபாயில் இருந்து 32 ரூபாயாகவும் மாத கட்டணம் 650 ரூபாயில் இருந்து 300 ரூபாயாகவும் குறைக்கப்படும்.

91 முதல் 120 அலகுகளுக்கான கட்டணம் 42 ரூபாயில் இருந்து 35 ரூபாயாகவும் மாதாந்த கட்டணம் 1500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாகவும் குறைக்கப்படும். (4-7)

## இன்றும்...

சரியான முறையில் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானது என்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

"நாடு இப்போது ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. உள்நாட்டு கடனை மறுசீரமைக்க மாட்டோம் என்று அரசாங்கம் முன்பு கூறியது என்றாலும் அந்த முடிவு மாற்றப்பட்டு உள்நாட்டு கடனை மறுசீரமைக்க தயாராக உள்ளனர்.

இதனால் இன்றும் நாளையும் நாட்டுக்கு மிக முக்கியமான நாட்கள். புத்த பெருமான் போதித்ததைப்போல எது நல்லது எது கெட்டது என்பதை நாம் சரியாக தேர்ந்தெடுப்பதற்கான ஒரு முக்கியமான தருணம் எழுந்துள்ளது.

உழைக்கும் மக்கள், நடுத்தர மக்கள், சாமானியர்களின் சேமலாப நிதியில் கூட இந்த அரசாங்கம் அழுத்தம் செலுத்தி இந்நாட்டு உழைக்கும் மக்கள் மீது அனைத்துச் சுமைகளையும் சுமத்தியுள்ளது.

இந்நிலையில் இருந்து நாட்டை மீட்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## நாட்டின்...

டெண்ணின் படி, மே மாதத்தில் பணவீக்கம் 25.2 சதவீதமாக பதிவாகியிருந்தது.

மே மாதத்தில் 21.5 சதவீதமாக இருந்த உணவுப் பொருட்களின் பணவீக்கம் ஜூன் மாதத்தில் 4.1 சதவீதமாக கணிசமாகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதத்தில் 27 சதவீதமாக இருந்த உணவு அல்லாத பணவீக்கம் ஜூன் மாதத்தில் 16.2 சதவீதமாகக் குறைந்துள்ளது. (4-7)

## நலன்புரித்...

காது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வசும நலன்புரி வேலைத் திட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கு அதிகாரிகளின் தலையீட்டின் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென அமைச்சர் வலியுறுத்துகின்றார்.

கம்பஹா மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி களுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

நிவாரணம் கிடைக்காதவர்களுக்காக மேன்முறையீடு செய்வதற்கு அரசாங்கம் கால அவகாசம் வழங்கியுள்ளது. சமுர்த்தி பெறுபவர்களில்30 வீதமானவர்கள் அதற்குத் தகுதியற்றவர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறைகள் தொடர்பாக முன்வைக்கப்படும் முறையீடுகளை ஆராய கிராம குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என அனைத்து பிரதேச செயலாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இந்தச் செய்தியை அரசாங்கத்தின் உயர் மட்டத்திற்கு தெரிவிப்போம்.

இதை சமாளிக்க கிராமகுழுக்களுக்கு அதிகாரம் வழங்க அதிகாரிகள் விரும்பவில்லை என்றால், இப்பணியை அத்தியாவசிய சேவையாக செய்யவேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

## மனித...

மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

இந்த இடத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது என்பது காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம். அல்லது போரில் உயிரோடு பிடிக்கப்பட்ட போராளிகளை கொண்டுவந்து புதைக்கப்பட்டுள்ளதாக இருக்கலாம். இது தொடர்பான முழுமையான அகழ்வு பணி நடைபெறவேண்டும்.

இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற அகழ்வு பணிகள் மூலமாக மூடி மறைக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

ஆகவே, இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் அக்கறை காட்டவேண்டும்.

சர்வதேச கண்காணிப்புடன் இவ்வாறான அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்படுவதன் ஊடாகத்தான் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு வழியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1616
வெற்றி இலக்கங்கள்
துலாம் 2 2 6 6 5 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2023.06.30
சீட்டிழுப்பு இலக்கம் 1191
U 23 25 34 52
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.30
சீட்டிழுப்பு இலக்கம் 3403
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Z 21 32 38 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1509
W 25 19 34 53 67

மஹஜன சம்பத
திகதி 2023/06/30
சீட்டிழுப்பு இலக்கம் 5161
R 5 4 3 5 0 8
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன (ராசிசுப பலன்)
சீட்டிழுப்பு இலக்கம்: 470
ரூ. 44,064,640.80
வெற்றி இலக்கங்கள்
தனுசு 06 35 44 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,607,134.36

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2135
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.06.30
தினம் வெள்ளிக்கிழமை
V 33 46 60 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 3,802,180/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.30
வெற்றி வாரம்: 4296
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,581,145.50
வெற்றி இலக்கங்கள்
12 47 49 50 U
DLB

சசிரி
343
2023.06.30
பச்சை
வெற்றி இலக்கங்கள்
16 41 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,924,340/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
வெற்றி இலக்கங்கள் 30 52 55 62
விருச்சிகம்
திகதி 2023-06-30
வெற்றி வாரம் 3847
வர்ணம் கரும் நீலம்
ரூ. 10,133,600/-
DLB

லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 18 11 58 59 73
1311
2023.06.30 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 342,162,661.00
DLB

அட கோட்டிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 1961
சீட்டிழுப்பு திகதி: 2023.06.30
ரூ. 54,633,609.20
வெற்றி இலக்கங்கள்
06 24 45 76 H
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## English Classes

☑ Grade 01 to A/L & Others
☑ Spoken with Grammar
☑ IELTS படிப்பவர்களும் தொடர்புகொள்ளலாம்
☑ Tuition Directors மார்களும் தொடர்பு கொள்ளலாம்
☑ உங்கள் வீடு வந்தும் கற்பித்துத்தரப்படும்

(16150)

**076 232 1903**

## HOTEL பணியாளர்கள் தேவை

புதிதாக அமைக்கப்பட்டுள்ள Hotel & Restaurant ற்கு பணியாளர்கள் (ஆண்/பெண்)

- Receptionist
- House Keeper
- Waiter
- Cleaner
- Cook
- Kitchen Helper

குறிப்பு:- முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(16145)

**Saffron** Hotel & Restaurant
**075 410 0329**
**077 834 8336**

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் தெற்கு சுன்னாகத்தில் 41 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. 3, 2 1/2, 2, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.

பாதை 18 அடி (உள்ளக பாதை) இரண்டு பிரதான பாதையுள்ளது.



- சுன்னாகம் BOC வங்கி முன் வீதியில் இருந்து 1 1/2 Km தூரம்
- மருதனார்மடத்தில் இருந்து உரும்பிராய் வரும் வீதியில் ஆச்சிரமம் வீதியில் இருந்து 2 km தூரம்.
- மருதனார்மடத்தில் இருந்து உரும்பிராய் வரும் வீதியில் விலாத்தியடி வீதியில் இருந்து 1 1/2 km தூரம்
- ஒரு பரப்பின் விலை 18 இலட்சம் தொடக்கம் 15 இலட்சம் வரை

(16140)

தொடர்பு கொள்ள

**076 788 9409, 074 171 0608**


## டெங்கு தொற்றாளர்கள் யாழில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இவ்வருட யூன் மாத கால பகுதி வரை 1834 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 1527 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 64 பேரும் மன்னார் மாவட்டத்தில் 66 பேரும் வவுனியா மாவட்டத்தில் 107 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 70 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடமாகணத்தில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இவ்வருடம் நிறைவடைய ஆறு மாதங்கள் உள்ள நிலையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. (4-7)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் உள்ள உணவகத்திற்கு கொத்து ரைஸ் வேலை, கேக் ஐசிங், மேசை பராமாரிப்பு மற்றும் சமையல் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

(16155)

**076 779 7674**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE



அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=

(16033)

**T.P: 077 544 8503**

## வேலையாட்கள் தேவை

வல்வெட்டித்துறையில் இயங்கும் Village Hotel Indian Restaurant ற்கு

- House Keeper
- Waiter (உணவு பரிமாறுநர்)

அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை

(16146)

**076 830 3931**

## வேலையாள் தேவை

ஏற்கனவே பெண்கள் வேலை செய்கின்ற மில்லிற்கு பெண்/ஆண் வேலையாட்கள் தேவை.

சம்பளம் : 1,500/=, 2,500/= இற்கு மேல் (நி.ப.உ)

(C-6849)

**077 936 1356**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-6851)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport க்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

(C-6851)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

## English Classes

**Gr 1 to O/L**

**Grammar with Spoken**

வீடு வந்து கற்பிக்கப்படும்.

(16129)

**077 331 4608**
யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு பகுதியில் 3 அறை கொண்ட வடக்கு வாசல் வீடு மற்றும் பண்டத்தரிப்பு பகுதியில் 9 பரப்புக் காணி என்பன உடன் விற்பனைக்கு.

(16151)

**076 105 6343**


## மரண அறிவித்தல்



### திரு. பசுபதி புவனேந்திரம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், அன்னங்கை மற்றும் (ஜேர்மனி) Mulheim வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பசுபதி புவனேந்திரம் அவர்கள் 24.06.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அஞ்சலி நிகழ்வு : 03.07.2023
திங்கட்கிழமை 3.00 pm
சகோதரன் தெய்வேந்திரம் இல்லம்
ஊரெழு கிழக்கு
நாவலம்பதி
ஊரெழு

தகவல் :
குடும்பத்தினர்

077 618 1437

(16143)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16152)

**076 826 0354, 076 057 0354**

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

**கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

**பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.**

உரிமையாளர் :
தே. கலைத்தாசன் (கரன்)
**021 315 5900**

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

(16152)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org